ருக்கிறது. அது அரசியல் காரணமாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று பொது மக்கள் கூறுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எந்த ஒன்றியத்தையும் ஒதுக்கவேண்டும் என்ற தனிப்பட்ட எண்ணம் அரசுக்குக் கிடையாது. குறிப்பாக 376 ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும், மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்ற முறையில்தான் தன்னிறைவுத் திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறதோ அவற்றிற்கு முன் உரிமை கொடுத்து எடுத்துக்கொண்டு வேலைகள் செய்யப்படுகின்றன. அரசியல் காரணமாக எந்த ஒன்றியமும் ஒதுக்கப்படவில்லை. அப்படிப்பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அந்தப் பகுதிகளில்—இரண்டு ஒன்யறிங்கள் ஒரு தொகுதியிலேயே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அறித்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. அ. ரகுமான்கான். கேள்வி நேரம் முடிந்தவுடன் பேரவை விதிகளுக்கு இணங்க, உரிமைப்பிரச்னை கொடுக்கப்பட்டிருக்குமானால், அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கப்பெற்றுள்ள உரிமைப் பிரச்னை என் ஆய்வில் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: * *

.. .. ..

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1981 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவைக்குறிப்பில் ஏற வேண்டாம். திரு. ரகுமான்கான், திரு சுந்தரராஜ், திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். அது என் ஆய்வில் இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் சப்ஜெக்ட்டுக்கு உள்ளே போகவில்லை. ஒரு உரிமை மீறல் பிரச்னை எழும்போது அதில் வாதத்திற்குரிய பிரச்னை இருந்தால் அல்லது சில 'பாக்ட்ஸ்' சம்பந்தமாக டிஸ்ப்யூட் இருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சரை அல்லது முதல் அமைச்சரை கேட்டு அதற்குப் பிறகு நீங்கள் முடிவிற்கு வரலாமே தவிர எழுப்பியிருக்கக்கூடிய பிரச்னையில் 'ப்ரைமா பேஸி' கேஸ் இருக்குமானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது முதல் அமைச்சர் அவர்களுக்கு அறிவித்து அவர்கள் விரும்புகிற சமயத்தில், அவர்கள் பதில் சொல்கிறவரை இந்தச் சபை காத்திருக்கவேண்டிய அவசியமில்லை தாங்களும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் பிரச்னை இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி நான் ஆராய வேண்டும். நான் ஆராய்ந்த பிறகுதான், அமைச்சரோ, மற்றவர்களோ பதில்சொல்ல வேண்டிய நிலைமை வரும். நான் தெளிவாகவே இருக்கிறேன்; எனக்கு குழப்பம் இல்லை.

*டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டார்கள் தரப்பட்டிருக்கின்ற உரிமைப் பிரச்னைக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது, அப்போது அதைச் சந்திக்க இருக்கிறேன் என்று நேற்றையதினம் சொன்னார்கள். ஆனால் நான் குறிப்பிடவில்லை. அதற்குப் பதில் சொல்வார் என்று பத்திரிகைகளிலே பெரிய கொட்டை எழுத்துக்களில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களில் வருவது என்பது அந்தந்த ஆசிரியர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

டாக்டர் மு. கருணாநிதி: உங்களுடைய தீர்ப்பு நாளைப் பற்றியதா அல்லது உரிமைப் பிரச்னை உண்டா, இல்லையா என்பது பற்றியா ?

1981 மார்ச் 3]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம் பேசுகின்றபோது நாங்களும் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்கள் குறிப்பிடுகின்றபோது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். அது எடுத்துக்கொள்ளப்படுமானால், நான் அதற்கு விளக்கங்களைத் தரவேண்டும் என்று சொன்னாரே தவிர, எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர் சொல்லவில்லை. அவர் சொல்வதற்கு எந்த விதமான முகாந்திரமும் இல்லை. நீங்கள் வேண்டுமானால் குறிப்பைப் பாருங்கள். நான் கேட்டவரையில் அதுதான் விஷயம்.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நேற்றையதினம் தங்களிடம் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக தாங்கள் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார் என்று சொன்னீர்கள். அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு 'காங்கிரஸ் கட்சி ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறது; அப்போது நான் விரிவாகப் பேசுகிறேன்' என்று சொன்னார். இவ்வளவு ரிகார்டுகள் ஏற்பட்டபிறகு, இன்றைக்கு மீண்டும் தாங்கள் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லும்போது, எங்கள் உரிமையையே நீங்கள் பறிக்கிறீர்கள் என்ற நிலை, அச்சம் ஏற்படுகிறது. அரசாங்கத்திற்கு எந்தவிதமான பிரச்னையும் இதிலே இல்லை. முதலமைச்சர் அவர்கள் இந்த அவையின் ஒரு உறுப்பினராக இருக்கிறார்; அந்த வகையில் அவர்மீது ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன். அவர் அதற்கு பதில் சொல்ல வேண்டிய உரிமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டு பதிலளிக்க வேண்டிய அவசியமும் இல்லை. இந்த விஷயத்தை அரசாங்கத்திற்கு தகவலுக்காக அனுப்ப வேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே, இதனை உடனடியாக இப்போதே அவையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உரிமைப் பிரச்னைபற்றிக் கேட்கிறபோது, உரிமைப் பிரச்னை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்வதற்கு மட்டும்தான் அரசுத் தரப்பிலே உரிமையிருக்கிறது. உரிமைப் பிரச்னை உண்டா, இல்லையா என்று வருகின்றபோது, அதைப் பற்றிச் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லை. அது பேரவைத் தலைவருக்குத் தான் இருக்கிறது. ஆகவே அரசுத் தரப்பில் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னதாகச் சொல்வது சரியல்ல; அர்த்தமல்ல.

டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால், உரிமைப் பிரச்னை வருகிறது என்று சொன்னதே ஒரு தவறு; அப்படிச் சொன்னதற்காகவே அவர்மீது ஒரு உரிமைப் பிரச்னை கொடுக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைப் பிரச்னைமீது உரிமைப் பிரச்னை கொடுப்பது என்றால், உரிமைப் பிரச்னைகள் கொடுத்துக் கொண்டே போகலாம். உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்வதா, இல்லையா என்பதை நான் தீர்மானிக்க வேண்டும். (குறுக்கீடு) முதல்வர் அவர்கள் நேற்றையதினம் கூறியதைக் குறிப்பிலிருந்து படிக்கிறேன். 'உரிமைப் பிரச்னை வரயிருக்கிறது என்று கருதுகிறேன்' என்றுதான் சொல்லியிருக்கிறார். வந்துவிட்டது என்று சொல்லவில்லை. 'அப்படி வந்தால் விளக்கம் தரத் தயாராக இருக்கிறேன்' என்று தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்னை எடுத்துக் கொள்வதை என்னுடைய ஆய்விலே வைத்திருக்கிறேன். எடுத்து பிறகுதான் அவருடைய பதில் வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணமூர்த்தி இன்றைக்கு காலையிலேதான் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, என்ன என்று கேட்டு டிஸ் அலவ் செய்யுங்களேன். இல்லை கன்சிடர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்சிடர் பண்ணத்தான் இங்கே அலவ் பண்ணுவதே தவிர, இப்போது இங்கே கேட்க முடியாது. அப்படி கேட்பது மரபு இல்லை. வழக்கம் இல்லை. உரிமை பிரச்னை காலையிலே தான் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிறது உரிமைப் பிரச்னை மீது நான் பேசவில்லை, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சம்பவத்திற்கு அடிப்படை, நேற்று காலை நான் கொடுத்திருக்கிறேன். நேற்று காலையிலிருந்து இன்று வரை அரசாங்கத்திடமிருந்து பதில் வர வேண்டுமென்று தாங்கள் எதிர்பார்ப்பது ஏற்றதல்ல. என்னுடைய........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதையும் அனுமானிக்க முடியாது. ஆய்விலே இருக்கிறது என்று நான் சொல்கிற போது நீங்களாக கற்பனையிலே எதையும் எடுத்துக் கொள்ள முடியாது. நான் அதை அனுமதிக்க முடியாது.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு பிரச்னையை சந்திப்பதாக நேற்றைய தினம் அறைகூவல் விட்டு விட்டு இன்றைக்கு நீங்கள் அதிலிருந்து நழுவி ஓடுகிற நிலைமையைப் பார்க்கும் போது.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நழுவுவதாகக் கருத வேண்டாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எப்படியும் முறைகளவே அறிவிக்கப்பட்டுவிட்ட இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு அடையாளமாக நாங்கள் இப்போது வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நழுவுதல் போன்றது எல்லாம் எங்களுக்குத் தெரிந்த கலை அல்ல.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் மீது ஒரு அபாண்டமான பழியைச் சுமத்தியதன் காரணமாக, அதை நாங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்து, நீங்கள் இன்னும் அதை எடுத்துக் கொள்ளாத நிலையில், உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கவனத்திற்கு அவர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன்.

It was not necessary that a matter of privilege should be taken the same day on which notice had been given. It could be taken on a subsequent day. The chair in its discretion may take it at any time.

ஆகவே பேரவைவிதிகளின்படிதான் நடைபெற்றிருக்கிறது. பார்லிமெண்டிலே இவையெல்லாம் அனுமதிக்கப்படுவதில்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகர கல்லூரி மாணவர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. நெடுமாறன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் சென்னை நகரிலே குருநானக் கல்லூரி, புதுக் கல்லூரி, ஜெயின் கல்லூரி அம்பேத்தூர் கல்லூரி, ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக, சகல கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் உருவாகியுள்ள பதட்ட